**O.S.No.320/2019**

**PW1 :** சந்தோஷ்பாலு தேதி 6.3.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் மனைவி 2ம் முறையாக கர்பமான போது நிஷாந்த் மருத்துவமனையின் பரிசோதனை செய்து கொண்ட பிறகு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்தோம் என்றால் சரிதான். நிஷாந்த் மருத்துவமனையில் **intensive care unit** வசதியில் 2015 – 17 வருடத்திலேயே அனைத்து உபகரணங்களும் அமைக்கப்பட்டு மேற்படி வசதி ஏற்படுத்தப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. கொங்கு ஆம்புலன்ஸ் வசதிக்கான அக்ரிமென்ட் நிஷாந்த் மருத்துவமனை செய்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மனைவி **empolism** ஏற்பட்ட பிறகு உடனடியாக சுதா மருத்துவமனை ஆம்புலன்ஸ் வந்துவிட்டது என்றால் சரிதான். நிஷாந்த் மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் என் மனைவியை ஆம்புலன்சில் வைத்த போது சுதா மருத்துவமனை மருத்துவர்களும் வந்து விட்டார்கள். இரு மருத்துவமனை மருத்துவர்களும் என் மனைவியை ஆம்புலன்சில் சுதா மருத்துவமனைக்கு எடுத்து வந்தார்கள். என் மனைவியை பிரசவத்திற்கு அட்மிட் செய்த பிறகு நிஷாந்த் மருத்துவமனையில் எங்களுக்கு மருத்துவ செலவுக்காக தொகை எதுவும் பெறவில்லை. 3ம் பிரதிவாதி டாக்டர் பத்மா **Anesthesia specialist** என்றால் சரிதான். என் மனைவிக்கு 2 மருத்துவமனையிலும் முறையான சிகிச்சை அளித்தும் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது போல் நிஷாந்த் மருத்துவமனையில் மருத்துவ நிபுணத்துவத்தில் சிகிச்சை அளித்ததில் எந்த குறையும் இல்லை என்றும் மருத்துவரின் அஜாக்கிரதை எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் மீது தான் நான் பரிகாரம் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். சுதா மருத்துவமனையில் என் மனைவி இறந்துவிட்டதால் அந்த மருத்துவமனையை தரப்பினராக சேர்த்திருக்கிறேன். சுதா மருத்துவமனையின் மீது எந்த பரிகாரமும் கோரவில்லை.